***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 14/2020 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | விமலா |
| *Father/Husband's Name* | க/பெ. ஜெயபால் |
| *Village* | அசேஷம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 65 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 11.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடுத்தனம் செய்து வருகிறேன். இவ்விபத்தில் இறந்துபோன ஜெயபால் என்பவர் எனது கணவர் ஆவார்.

கடந்த 2018 ம் வருடம் ஜுலை மாதம் 24 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் எனது கணவர் எங்கள் வீட்டில் மதியம் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு இருச்சக்கர வாகனத்தில் மன்னார்குடி to திருமக்கோட்டை ரோட்டில் அசேஷம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது ஐயப்பன் கோவில் அருகே அதே திசையில் பின்னால் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த லாரி எனது கணவர் சென்ற இருச்சக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியது. எனது கணவர் சாலையின் இடது கை ஓரமாக சென்றார். பின்னால் வந்த லாரி வேகமாக வந்து எனது கணவர் வந்த வாகனத்தின் மோதியது. மேற்படி விபத்தில் எனது கணவரின் வலது பக்க கால் சேதம் அடைந்தது. நான் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்றேன். விபத்து ஏற்பட்ட இடம் அருகே என்னை அனுமதிக்கவில்லை. பின்பு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தேன். பின்பு மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மன்னார்குடி அரசு மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது**). விபத்து ஏற்படுத்தியவர் அங்காளம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் என்று கேட்டு தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தை எனக்கு நேரிட்டு தெரியாது. விபத்து நடந்த நேரத்தில் பாரதிதாசன் நகரில் எனது வீட்டில் இருந்தேன். விபத்து குறித்து யார் என்னிடம் கூறினார்கள் என்பதை பொறுத்து கூறிய நபரின் பெயர், முகவரி குறித்து தெரியுமா என்றால் தெரியாது. பட்டியல் சாட்சி 2 பிரகாஷ் எனது உறவுக்காரர். பட்டியல் சாட்சி 3 பன்னீர்செல்வம் எனது உறவினர் தான். என்னிடம் விபத்து நடந்ததாக தெரிவித்த நபர் ஒரு சிறிய பையன். அவருக்கு வயது 15 இருக்கும்.

அந்த சிறிய பையன் தான் விபத்தை பற்றி என்னிடம் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். பட்டியல் சாட்சி 2 பிரகாஷ் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது நேரம் என்ன இருக்கும் என்றால் சம்பவ நாளன்றே சுமார் 03.30 ல் இருந்து 03.45 வரை இருக்கும். சம்பவத்தன்று போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரித்தார்கள். சுமார் 04.00 மணியளவில் என்னை விசாரித்தார்கள். எனது கணவரையும் விசாரித்தார்கள். சொல்ல சொல்ல எழுதிக்ளெகாண்டார்கள். அதில் என்னிடமும், எனது கணவரிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அதன் பிறகு போலீசார் எந்த தருணத்திலும் விசாரிக்கவில்லை.

லாரியின் எண், எதிரியின் முகவரி எனக்கு நேரிட்டு தெரியாது என்றும், அதனை போலீசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். எதிரியின் முகவரி அங்காளம்மன் கோவில் தெரு என்று தெரியும்.

எதிரியை தொடர்புபடுத்தி தவறான முறையில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், எனது கணவர் அஜாக்கிரதையினாலும், கவனக்குறைவினாலும் ஏற்பட்ட விபத்தை மறைத்து எதிரி அதிவேகமாக வாகனத்தை இயக்கியதாக அதனால் இந்த விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 14/2020 – P.W.2 (LW8)***

| | |
|---|---|
| *Name* | அன்பானந்தன் |
| *Father/Husband's Name* | அன்பழகன் |
| *Village* | அசேஷம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *42* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 11.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆட்டோ டிரைவராக உள்ளேன். விபத்தில் இறந்த ஜெயபால் எனது தாத்தா ஆவார்.

கடந்த 24.07.2018 ம் தேதியன்று மன்னார்குடி to திருமக்கோட்டை ரோட்டில் உள்ள அசேஷம் ஐயப்பன் கோவில் அருகே எனது தாத்தா சென்ற இருச்சக்கர வாகனத்தை லாரி மோதி விபத்தை ஏற்படுத்தியது தொடர்பாக தகவல் கேள்விப்பட்டு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். பின்னர் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்னர் பிரேத விசாரணை அறிக்கைக்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.